# பத்திரிக்கைச் செய்தி

## தமிழ்நாடு அரசு

## கால்நடை பராமரிப்புத்துறை

சேலம் மாவட்டம் கால்நடை பராமரிப்புத்துறையில் காலியாக உள்ள ஊர்தி ஓட்டுநர் பதவிக்கு தகுதியுள்ளோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | பதவியின் பெயர் | காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை (01.07.2019 அன்றுள்ளபடி) | இனசுழற்சி | கல்வி மற்றும் பிற தகுதிகள் | ஊதிய விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1. | ஊர்தி ஓட்டுநர் | 1 | SCA (W) (Priority)-இல் விண்ணப்ப தாரர்கள் இல்லாத பட்சத்தில் SCA(GT) (Priority)-இல் தேர்வு செய்யப்படும் | 1)8–ஆம் வகுப்பு தேர்ச்சி<br>2)தமிழ் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்<br>3)ஓட்டுநர் உரிமம் நாளது தேதி வரை புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும்<br>4)ஊர்தி ஓட்டுவதில் குறைந்தபட்சம் 2 வருடம் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும் | Level -8 Rs.19500-62000/- |

| | |
|---|---|
| 1. | விண்ணப்பதாரர் சேலம் மாவட்டத்தில் வசிப்பதற்கான ஆதாரத்தின் நகலை இணைத்திட வேண்டும்.(ஆதார் அட்டை , ஓட்டுநர் உரிமம் அட்டை, குடும்ப அட்டை மற்றும் வாக்காளர் அட்டை இவற்றில் ஏதேனும் ஒன்று) |
| 2. | காலிப்பணியிடங்கள் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்ற விதவைகள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் முன்னாள் இராணுவத்தினர்கள் ஆகியோரின் விகிதாச்சாரத்தை உள்ளடக்கியதாகும். |
| 3. | SCA (W) (Priority) –இல் விண்ணப்பதாரர் எவரும் இல்லாத பட்சத்தில் SCA(GT) (Priority)-இல் தகுதியான நபர்களை தேர்வு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. |
| 4. | மேற்கண்ட பதவிக்கு விண்ணப்பதாரரின் குறைந்தபட்ச வயது 18 ஆகும். அதிகபட்ச வயது அருந்ததியர், வகுப்பினர்களுக்கு 35 ஆகும். (01.07.2019 அன்றுள்ளபடி) |
| 5. | விண்ணப்பங்கள் இலவசமாக சம்பந்தப்பட்ட மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தில் அலுவலக பணி நேரத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர் சுயவிலாசமிட்ட ரூ.5–க்கான அஞ்சல் வில்லை ஒட்டிய உறையுடன் விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம் அல்லது விண்ணப்பங்களை அந்தந்த மாவட்ட ஆட்சியர் இணையதளம் / மண்டல இணை இயக்குநர் இணையதளத்தில் கட்டணமின்றி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். |
| 6. | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மண்டல இணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, கால்நடை பன்முக மருத்துவமனை வளாகம், பிரட்ஸ்ரோடு, சேலம்–1 என்ற முகவரிக்கு 18.12.2020 அன்று பிற்பகல் 5.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பிட வேண்டும் அல்லது நேரில் ஒப்படைக்க வேண்டும். |
| 7. | விண்ணப்பிக்கும் பதவியின் பெயரினை மேல் உறையின் மீது பெரிய எழுத்துகளில் தவறாது குறிப்பிட வேண்டும். |
| 8. | மேற்கண்ட பதவிக்கு நேர்காணல் அடிப்படையில் மட்டுமே தேர்வு செய்யப்படும். நேர்முகத் தேர்வினை எந்த நிலையில் நிறுத்துவதற்கும் / ரத்து செய்வதற்கும் மாவட்ட ஆட்சியருக்கு முழு அதிகாரம் உண்டு. நேர்முகத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் விண்ணப்பதாரர்கள் இன சுழற்சி அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள். |
| 9. | ஒரு பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதி கல்லூரி படிப்பிற்கு குறைந்ததாக இருந்தால், ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினர் அல்லது பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த ஒரு விண்ணப்பதாரர் மற்றும் ஆதரவற்ற விதவைகள் எந்த சாதியை சார்ந்தவராக இருப்பினும் குறைந்த அளவு பொதுக் கல்வியை காட்டிலும், மேற்பட்ட பொதுக்கல்வித் தகுதியை பெற்றவராய் இருந்து அல்லது கல்லூரிப் படிப்பு பட்டம் பெற்றிருந்து நியமிக்கப்படுவதற்கு மற்றபடி தகுதி உடையவராய் இருந்தால் நியமிக்கப்படுவதற்காக வயது வரம்பு (ஏதேனும் நிர்ணயிக்கப்பட்டிருந்தால் அந்த வயது வரம்பு அவருக்கு பொருந்தாது) |

2/12/20

மாவட்ட ஆட்சிக்கலைவர்

சேலம்

<u>தமிழ்நாடு அரசு</u>

<u>கால்நடை பராமரிப்புத் துறை - சேலம் மாவட்டம்</u>

<u>ஓட்டுநர் பதவிக்கான விண்ணப்ப படிவம்</u>

| | | | |
|---|---|---|---|
| 1 | அ) விண்ணப்பதாரரின் பெயர்<br>(தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்) | | கடவுச்சீட்டு அளவு<br>புகைப்படம் |
| | ஆ) பாலினம் | | |
| 2 | தந்தை பெயர் / கணவர் பெயர் | | |
| 3 | நிலையான முகவரி<br>(அஞ்சலக குறியீட்டு எண்ணுடன்) | | |
| 4 | சொந்த மாவட்டம் | | |
| 5 | அ) தொலைபேசி எண்<br><br>ஆ) கைபேசி எண்<br><br>இ) மின்னஞ்சல் முகவரி | | |
| 6 | அ) பிறந்த தேதி<br><br>ஆ) வயது (01.07.2019 அன்றுள்ளபடி) | | |
| 7 | அ) அரசு பணிகளில் சேர முன்னுரிமை பெற்றவரா | | |
| | ஆ) ஆம் எனில் எந்த வகையான முன்னுரிமை ? (ஆதாரமாக சான்றின் நகல் இணைக்கப்பட வேண்டும்) | | |
| 8 | கல்வித் தகுதி மற்றும் பிற தகுதிகள் | | |

| | | | |
|---|---|---|---|
| 9 | அ) மதம் | இந்து/இஸ்லாம்/கிறிஸ்துவம்/ பௌத்தம்/பிற | |
| | ஆ) வகுப்பு / உட்பிரிவு சாதி | வகுப்பு | உட்பிரிவு சாதி |
| | | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (அருந்ததியர்) | |
| | | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் | |
| | | பழங்குடியினர் | |
| | | மிகவும் பிற்பட்ட வகுப்பினர் | |
| | | பிற்பட்ட வகுப்பினர் | |
| | | பிற்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) | |
| | | பொதுப் பிரிவினர் | |
| 10 | அ) விண்ணப்பதாரர் மீது குற்றவியல் வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளதா ? | ஆம் / இல்லை | |
| | ஆ) ஆம் எனில் விவரங்கள் தரவும் | | |
| 11 | அ) விண்ணப்பதாரர் குற்ற வழக்கில் (Criminal Case) ஏதேனும் தண்டனை பெற்றவரா | ஆம் / இல்லை | |
| | ஆ) ஆம் எனில் விவரங்கள் தரவும் | | |
| 12 | சான்றுகள் | 1. கல்விச் சான்று | |
| | | 2. சாதிச் சான்று | |
| | | 3. ஓட்டுநர் உரிமம் | |
| | | 4. சம்பந்தப்பட்ட வட்டார போக்குவரத்து அலுவலரிடமிருந்து பெறப்பட்ட வாகனம் இயக்கும் திறன் குறித்த சான்று | |
| | | 5. ஊர்தி ஓட்டுவதில் குறைந்தபட்சம் 2 வருடம் முன் அனுபவம் பெற்றதற்கான சான்று | |
| | | 6. உடல் தகுதிக்கான மருத்துவச் சான்றிதழ் | |

**<u>உறுதி மொழி</u>**

**மேற்குறிப்பிட்டுள்ள என்னால் வழங்கப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் சரியானவைகள் எனவும் இதனில் ஏதேனும் தவறு என பின்னர் தெரிய வந்தால் அதற்காக எடுக்கப்படும் எல்லா வகையான நடவடிக்கைக்கும் நான் உட்படுவேன் என உறுதி அளிக்கிறேன்.**

விண்ணப்பதாரர் கையொப்பம்

நாள்.

குறிப்பு– பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மண்டல இணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, சேலம் மாவட்டம் என்ற முகவரிக்கு அறிவிக்கையில் குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் தபால் மூலமாகவோ அல்லது நேரிலேயோ ஒப்படைக்கப்படவேண்டும் .